ஒதுக்கீட்டுத் தலைப்பு 185 – தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஜூன் 13 ஆந் திகதியன்று அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புரைகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிச் செவ்வைகளின் அடிப்படையிலானவையாகும். அம்மீளாய்வினதும் பரிசீலனையினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் எனும் வரையறைக்குட்பட இயலுமானளவு கணக்காய்வை மேற்கொள்ளுமாறு தயாரிக்கப்பட்டனவாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றுக்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் 148,149,150,152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கேற்ப பேணப்படுதல், தயாரிக்கப்படுதல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்ற கணக்குகளையும் கணக்கிணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல், அவற்றை நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்கான உள்ளகக் கட்டுப்பாட்டை உருவாக்குதல், அமுலாக்குதல், பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புரைகள்

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புரைகள் மற்றும் கீழே 1.4 தொடக்கம் 1.10 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் நீங்கலாக, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்பட்டது.

**(அ) புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணாமை**

மீளாய்வாண்டின்போது அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2013 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பதில் சமர்பபிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 3,308,345 ஆகும்.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

(i) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மீளாய்வாண்டிற்கான அமைச்சின் மொத்த நிகர நிதியேற்பாடு ரூபா 525,838,760 ஆகும். அதில் ரூபா 520,879,557 ஆண்டின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, நிகர சேமிப்பு ரூபா 4,959,203 ஆகும். அது மொத்த நிகர நிதியேற்பாட்டின் 0.94 சதவீதம் ஆகும். விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவு | 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு | 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகர நிதியேற்பாடு | 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | சேமிப்பு, நிகர நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | (%) |
| மீண்டுவருபவை | 59,290,000 | 66,738,760 | 896,456 | 1.34 |
| மூலதனம் | 9,400,000 | 459,100,000 | 4,062,747 | 0.88 |
| மொத்தம் | 68,690,000 | 525,838,760 | 4,959,203 | 0.94 |

**(ii) வரவு, செலவுத் திட்ட முரண்கள்**

- இரண்டு செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிகர நிதியான ரூபா 700,000 சேமிப்புக்குள்ளாகியிருந்தது.
- நான்கு செலவின விடயங்களுக்கு அதிகரித்த நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமையால் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு செலவின விடயங்களுக்குரிய நிகர நிதியேற்பாட்டில் 50 க்கும் 99 க்கும் இடைப்பட்ட சதவீதத்தில் அமைந்திருந்தது.

**(iii) எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவின முகாமைத்துவம்**

எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவினத்திற்காக வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்த நிதியினுள் செலவினம் மேற்கொள்ளப்படுவதற்கான முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அதன் பொருட்டு மேலதிக நிதி வழங்கப்படமாட்டாது எனவும் நி.பி 66 க்கமைய நிதிமாற்றத்தை திறைசேரி அங்கீகரிக்காது எனவும் 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை அறிவுறுத்தியபோதும், திறைசேரியின் அங்கீகாரத்துடன் அச்செலவின விடயங்களுக்கு நி.பி 66 க்கமைய ஏற்பாடு செய்திருந்த ரூபா 1,987,000 நிதியானது மீளாய்வாண்டின்போது மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றம் விதித்த வரம்பு**

விடய இலக்கம் 18501 – அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாகப் பாராளுமன்றம் விதித்த வரம்பும் உள்ளபடியான பெறுமதியும் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய வரம்பு | உள்ளபடி யானது | அதிகுறைந்த வரம்பு | உள்ளபடி யானது | அதிகூடிய வரம்பு | உள்ளபடி யானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1,200,000 | 946,400 | 300,000 | 951,062 | 2,000,000 | 3,750,220 |

பின்வரும் அவதானிப்புரை மேற்கொள்ளப்படுகின்றது.

அமைச்சினது முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்காகப் பாராளுமன்றம் விதித்த அதிகூடிய மீதியின் வரம்பு ரூபா 2,000,000 ஆகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டு முடிவில் அந்த வரவு மீதி ரூபா 3,750,225 ஆகியமையால் நடவடிக்கைகள் ரூபா 1,750,220 வரம்பை மீறியிருந்தன

## 1.4 சிறந்த ஆளுமையும் கணக்களி தகைமையும்

### 1.4.1 வருடாந்த செயற்திறன் அறிக்கை

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள், உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்களுக்கு

அறிவிக்கப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீ/எப்ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்படும் 2002 செப்டம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் பொது நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயற்திறன் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கான செயற்திறன் அறிக்கை 2013 ஜுன் 06 ஆந் திகதியின்றும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படாதிருந்தது.

### 1.4.2 வருடாந்த பொருட்கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருட்கொள்வனவுத் திட்டம் 2012 பெப்ரவரி 14 ஆந் திகதியன்றுதான் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.4.3 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 க்கமைய உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்றினை நிறுவுவதற்குத் தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு தவறியிருந்தது.

### 1.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமுல்படுத்துதல்

2000 மார்ச் 15 ஆந் திகதிய PF/PE/07 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை, 2000 ஜுன் 12 ஆந் திகதிய 1A1/2000/1 மற்றும் 2011 ஜனவரி 15 ஆந் திகதிய 1A1/2001/1 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை நிறுவி காலாண்டுக்கு ஒரு தடவையாவது அது கூட்டங்களை நடாத்த வேண்டுமாயினும், 2012 ஆம் ஆண்டில் ஒரு கூட்டத்தை மாத்திரம் அமைச்சு நடாத்தியிருந்தது.

## 1.5 சொத்து முகாமைத்துவம்

**பிற நிறுவனங்களுக்குரிய சொத்துக்களை முறையற்றவாறு பயன்படுத்தல்**

நிதி அமைச்சிற்குச் சொந்தமான மோட்டார் வாகனம் ஒன்று 2010 நவெம்பர் 22 தொடக்கம் முறையான அங்கீகாரமின்றி அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வு மாதிரிச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| **சனாதிபதி செயலகச் சுற்றறிக்கை** | | |
| 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | அமைச்சரின் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட 3 உத்தியோகபூர்வ வாகனங்களுக்குப் புறம்பாக மேலும் 5 வாகனங்கள் அந்நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. |
| **பொது நிதிச் சுற்றறிக்கை** | | |
| 2009 செப்டம்பர் 18 ஆந் திகதிய PF/437 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | அமைச்சிற்குச் சொந்தமான 7 வாகனங்களுக்குக் காப்புறுதி பெறப்பட வில்லை. |
| **நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | |
| 2012 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய அமப/12/1099/504/098 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் 5 ஆம் பந்தி | 127,500 | தேசத்திற்கு மகுடம் அலுவலகத்திற்குத் தேவையான உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக விடுவிக்கப்படும் அடிப்படையில் ஓராண்டிற்கு ஆட்சேர்க்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டபோதும், அதற்கு முரணாக மாதாந்தம் ரூபா 15,000 சம்பளத்தில் ஒப்பந்த மற்றும் தற்காலிக அடிப்படையில் 2 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு அவர்களுக்கு முறையே ரூபா 75,000 மற்றும் ரூபா 52,500 சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 1.7 செயற்திறன்

தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு 2011 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதிக்கெனத் தயாரித்த ஒன்றிணைந்த திட்டத்தில் பிரகாரம், 2012 ஆம் ஆண்டில் 18

வேலைகளைச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், அவற்றுள் 2 மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.8 மோசடித் தன்மை வாய்ந்த கொடுக்கல் வாங்கல்கள்

பினவரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் மேலதிகச் செயலாளர் தேசத்திற்கு மகுடத்தின் பொருட்டு பெற்றுக்கொண்ட முற்பணத்தில் ரூபா 30,821 பெறுமதியான உணவு, பானங்கள், பொருட்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்திருந்தபோதும், அவை அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்டதைக் குறிப்பதற்குக் கையிருப்புப் பதிவேடுகளில் அவை பதியப்படவில்லை. குறித்த பொருட்கள் அமைச்சின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை.

(ஆ) அமைச்சின் 2 சாரதிகள் 2012 பெப்ரவரி மாதத்தில் ஒரே வாகனத்தில் ஒரே தினத்தில் ஒரே நேரத்தில் கடமையாற்றியதற்காக பயணச் செலவினமாக ரூபா 5,250 படியாக வெவ்வேறாகப் பெற்றிருந்தனர்.

(இ) ஒவ்வொன்றும் ரூபா 9,000 ஆக 4 கோவைகளை வைப்பதற்குப் பயன்படுத்தும் 4 அலுமாரிகளை பெற்றுக்கொள்ளாமலேயே 2012 நவெம்பர் 16 ஆந் திகதியன்று ரூபா 36,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட 4 அலுமாரிகளில் 2 பின்னர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. எஞ்சிய இரண்டும் வழங்கப்படவில்லை. 2 அலுமாரிகளுக்குரிய ரூபா 18,000 ஆகிய அரசாங்கப் பணம் ஏறக்குறைய 4 மாதங்களாகத் தனியாரின் பாவனைக்குள்ளாகி 2013 மார்ச் 13 ஆந் திகதியன்று அமைச்சிற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தேசத்திற்கு மகுடம் செயலகத்திற்குத் தேவையான எழுத்து மேசை, அலுமாரி மற்றும் சோபா என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு 2012 டிசெம்பர் 11 ஆந் திகதியன்று ரூபா 342,965 வழங்குநர் நிறுவனம் ஒன்றிற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. சோபாவிற்கு ரூபா 80,010 செலுத்தப்பட்டிருக்கையில் அச்சோபாக்களுக்குப் பதிலாக 8 நாற்காலிகள் ரூபா 70,712 க்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய, எஞ்சிய ரூபா 9,298 வழங்குநரின் பொறுப்பில் 2013 ஏப்ரல் 23 ஆந் திகதியளவிலும் இருப்பதற்கு இடமளித்து அரசாங்கப் பணத்தை முறையற்றவாறு பயன்படுத்த வழிவகுக்கப்பட்டிருந்தது.

### 1.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஒரு ஊழியருக்கு 198 சதுர அடி அளவில் 74 ஊழியர்களுக்கு 14,660 சதுர அடியிலான கட்டிடம் ஒன்று வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது. 2012 ஜனவரி தொடக்கம் நவெம்பர் வரை ரூபா 12,100,000 ஆகவும் 2012 டிசெம்பர் மாதத்திற்கு ரூபா 300,000 ஆகவும் கட்டிடத்திற்குச் செலுத்தப்பட்ட மொத்த

வாடகை ரூபா 13,400,100 ஆகும். அதற்கமைய, ஒரு ஊழியரின் பொருட்டு கட்டிட வாடகையாக ஆண்டுதோறும் 181,082 அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேட்ட மட்டம் | 9 | 7 | 2 |
| (ஆ) | மூன்றாம் மட்டம் | 1 | 1 | - |
| (இ) | இரண்டாம் மட்டம் | 24 | 16 | 8 |
| (ஈ) | ஆரம்ப மட்டம் | 20 | 13 | 7 |
| (உ) | பிற (சமயா சமய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 1 | 1 | - |
| | மொத்தம் | 55 | 38 | 17 |

மீளாய்வாண்டு முடிவில் 17 வெற்றிடங்களை நிரப்ப இயலாது போயிற்று.